කථානායක, ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව

சபாநாயகர், இலங்கை பாராளுமன்றம்

*Speaker, Parliament of Sri Lanka*

**பாராளுமன்ற சபாநாயகர்**

**கௌரவ கரு ஜயசூரிய அவர்களின் செய்தி**

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலக இணையத்தளத்தினை ஆரம்பிக்கும் மதிப்பு மிக்க தருணத்தில் இச்செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நாட்டின் ஒவ்வொரு பிரசைகளும் இதை மிகவும் வரவேற்பார்கள்.

அரசாங்க நிர்வாகங்களின் மற்றும் அரசாங்க தொழிற்பாடுகளில் மிகையான அதிகார செயற்பாடுகள் காரணமாக பிரசைகளுக்கு மிகவும் அசௌவகரியங்கள் ஏற்படுகின்றன. அரசாங்கத்தின் கருணையற்ற தொழிற்பாடுகள் மூலம் பாதிக்கப்படும் பிரசைகளின் பிரச்சனைகளுக்காக நிவாரணத்தை பெற்றுகொள்ளும் முறை மிகவும் சிக்கலாக உள்ளது என பாராளுமன்ற ஆணையாளருக்கு அறிவிக்கப்படுகிறது. அத்தகைய தொந்தரவுகளிலிருந்து பிரசைகளை பாதுகாப்பதற்காகவே ஒம்புட்ஸ்மன் தாபிக்கப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டின் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 156 மூலம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்(ஒம்புட்ஸ்மன்) பதவி தாபிப்பதற்கு பாராளுமன்றத்தில் அதிகாரம் அளிக்கப்படுகிறது. அத்துடன் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் உள்ள அதிகாரங்கள் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை வரையறுத்து 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டம் மூலம் இப்பதவி உருவாக்கப்படுகிறது.

முறைப்பாடொன்று எப்பொழுதும் பொதுமக்களின் பிரதிநிதியொருவர் ஊடாக சபாநாயகருக்கு முன்வைக்கப்பட்ட பின்னரே பொது மனுக்கள் குழுவின் சிபாரிசுகள் மூலமாக ஒம்புட்ஸ்மனுக்கு குறித்துரைக்கப்படுவதனால் இச்செயற்பாடு பொதுமக்களுக்கு கடினமாக இருந்தது. அதற்கமைய 1994 ஆம் ஆண்டில் 26 ஆம் இலக்க (திருத்தம்) சட்டமானது அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது வேறு ஏதாவது அநீதிகள் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து நேரடியான முறைப்பாடுகளை பெற்று புலனாய்வு செய்வதற்கு ஒம்புட்ஸ்மனுக்கு அதிகாரம் அளித்துள்ளது.

இவ் எண்ணக்கருவில் ஏற்பட்ட மாற்றமானது முறைப்பாடுகள் முன்வைப்பதில் ஓர் விரைவான அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது.

புதிய குடியரசில் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகமானது பிரசித்தி பெற்ற சுதந்திரமான பாதுகாவலனாக உருவாகியுள்ளது. குடியரசு அமைப்பில் மக்களை பாதுகாக்கும் அதேவேளை அரசாங்கத்தை கண்காணிக்கும் ஓர் அதிகாரியாக தொழிற்படும் வகையில் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு முக்கியமான பங்கு வழங்கப்பட்டுள்ளது.

உலகத்தில் பலநாடுகளில் பாராளுமன்ற ஆணையாளர் என்னும் எண்ணக்கருவானது சக்தி வாய்ந்த மற்றும் ஆரோக்கியமானதாகவும் தோற்றம் கொண்டுள்ளது. இவ் எண்ணக்கருவானது சுதந்திரமானதும் இணக்கமானதும் மற்றம் நம்பிக்கையான இயல்பு அடிப்படையில் பொது நிர்வாகத்தில் பிரசைகளின் உரிமைகளுக்கான தீர்வுகளை வழங்குவதற்காகவும் துர்நிர்வாகத்தை நல்ல நிர்வாகமாகவும் மாற்றுவதற்கான பாதையாகவும் உள்ள ஓர் பொறிமுறையென அரசாங்கம் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒம்புட்ஸ்மனின் கடமைகள் பக்கச்சார்பு மற்றும் அரசியல் செல்வாக்குகள் அற்றதாக இருப்பதால் ஏதாவது சமூக பொருளாதார பின்னணியில் உள்ள ஒவ்வொரு பிரசையும் எவ்வித பயமுமின்றி பக்கசார்போ அல்லது செலவுமின்றி தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இன்னொரு நடவடிக்கையாக 1994 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க திருத்தத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட எதிர்பார்ப்புக்கள் கொண்டுவரப்படின்இ பொதுமக்களை அணுகும் புதிய தொழில் நுட்பத்தை உருவாக்கும் இன்னொரு புதிய படிமுறையாக இவ் இணையத்தள ஆரம்பமானது கருதப்படலாம்.

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம் தாபித்து 35 வருடங்கள் அடையும் வேளை புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பக்கசார்பின்றி வெளிப்படையான தீர்மானங்களை எடுத்து அதன் மூலம் நல்ல நிர்வாகத்திற்கு பங்களிப்பு செய்தமைக்காக எனது நன்றியை தெரிவித்துகொள்ள விரும்புகிறேன்.

கரு ஜயசூரிய
பாராளுமன்ற சபாநாயகர்